# இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் ‘கிளீன் ஸ்டேட்’ என்று சொல்வதற்கு துணை நிற்பீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

உங்களால்தான் நீர்நிலைகள் தூய்மையாக இருக்கிறது! உங்களால்தான் குழந்தைகள் நலமாக பள்ளிக்கு எல்லாம் சென்று வருகிறார்கள்!

நான் இந்தச் சென்னை மாநகருக்கு மேயராகப் பொறுப்பேற்ற போது, தலைவர் கலைஞர் எனக்கு என்ன அறிவுரை சொன்னார்கள் என்றால், “இது பதவியல்ல; பொறுப்பு” என்று சொன்னார். அதேபோல், நான் உங்களுக்குச் சொல்கிறேன்... நீங்கள் செய்வதும் வேலை இல்லை; அது சேவை!

**ஊரே உறங்கும்போது ஓய்வில்லாமல் உழைப்பவர்கள்!**

சென்னையில் நைட் டிராவல் செய்பவர்களுக்குதான் தெரியும்... பகலெல்லாம் பிசியாக இருக்கின்ற இந்த சிட்டியில், ஊரே அடங்கிய பிறகு, ஓய்வில்லாமல் உழைப்பவர்கள் நீங்கள்தான்!

உங்களின் அர்ப்பணிப்புமிக்க சேவை உணர்வைப் பார்த்து நான் மட்டுமல்ல; இந்த மாநகரமே நன்றியுணர்ச்சியோடு உங்களை வணங்குகிறது! ஒட்டுமொத்த சென்னை சார்பாக உங்களுக்கு எல்லாம் என்னுடைய இதயபூர்வமான நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்!

கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முன்பு, நான் இந்தச் சென்னைக்கு மேயராகப் பொறுப்பேற்றபோது, தூய்மையான நகராக இந்த நகரை உயர்த்த வேண்டும் என்று நினைத்தேன். அதற்காக தூய்மைப் பணிகளில், இயந்திரங்களைப் பயன்படுத்த நாங்கள் தொடங்கினோம்.

**நாம் இன்று அடைந்திருக்கும் மாற்றத்திற்கான முதல் படி!**

குப்பைகளை, மக்கும் குப்பை மக்காத குப்பை என்று பிரித்து வைத்து, அதை மேலாண்மை செய்ய வேண்டும் என்று பல்வேறு முன்னெடுப்புகளை எல்லாம் கொண்டு வந்தேன். அவையெல்லாம்தான் இன்றைக்கு நாம் அடைந்திருக்கின்ற மாற்றத்திற்கு முதல் படி!

இந்தச் மாநகரத்தை தூய்மையாகப் பாதுகாக்கின்ற உங்களைப் பாதுகாக்க வேண்டியது எங்களுடைய கடமை! உங்களுடைய மாண்பு காக்கப்பட வேண்டும்! உங்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்! உங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்! இதுதான், சமூகநீதி!

இந்தச் சமூகநீதிப் பயணத்தில் உங்கள் சுயமரியாதையைக் காத்து உங்கள் பசியைப் போக்கிடத்தான், இன்றைக்கு இந்த முதலமைச்சரின் உணவுத்திட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம்!

**சூடு குறையாமல் சுவையான உணவு!**

இந்தத் திட்டத்தின்படி, தூய்மைப் பணியாளர்களுக்கு அவர்களுடைய பணிகளுக்கு இடையில், உணவு வேளையில் சுவையும் ஆரோக்கியமும் நிறைந்த உணவு வழங்கப்படும்.

தூய்மையான முறையில் சமைத்து, டிஃபன் பாக்ஸில் வைத்து, சூடு குறையாமல் இருப்பதற்கு வெப்பக் காப்புப் பையில் அது எடுத்துச் செல்லப்பட்டு, தூய்மைப் பணியாளர்கள் பணியாற்றும் இடத்திற்கு அருகாமையிலேயே உள்ளாட்சி அமைப்புக்குச் சொந்தமான கட்டிடத்தில் உணவு பரிமாறப்படும்.

**நம்முடைய நலனுக்காக உழைக்கின்ற மக்களுக்கு உணவு அளிப்பது அரசின் பொறுப்பு என்கின்ற உணர்வோடுதான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம்.**

**தூய்மைப் பணியாளர்களுக்கு கழக அரசின் அடுக்கடுக்கான திட்டங்கள்!**

இது இல்லாமல், தமிழ்நாட்டில் தூய்மைப் பணியாளர்கள் நலனுக்காக நம்முடைய கழக ஆட்சிக் காலத்தில் முக்கியமான திட்டங்கள் நிறையச் செய்திருக்கிறோம். அதுபற்றி நான் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால்,

2006 - 2011ல் தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான், தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டது. அவர்களுக்கான நலத்திட்டங்களை வழங்குவதற்கு அவ்வாரியம் வாயிலாக வழிவகை செய்தோம். தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் தொடங்கப்பட்டன.

‘தாட்கோ’ நிறுவனம் மூலமாகவும், தூய்மைப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு தொழில் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்கள் தொழில் முனைவோராகிட வழிவகை செய்யப்பட்டது. தூய்மைப் பணியாளர்களுக்கு சுகாதாரக் காப்பீடு, பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல், தடுப்பூசி முகாம்கள் ஆகியவை கட்டாயமாக்கப்பட்டன.

நகர்ப்புறப் பகுதியில், தூய்மைப் பணியாளர்கள் தள்ளுவண்டிகளைப் பயன்படுத்துவதால், அவர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டத்தைப் போக்குவதற்கு மூன்று சக்கர மிதிவண்டி வாகனங்கள் மற்றும் இலகு ரக வாகனங்கள் வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

நகர்ப்புற தூய்மைப் பணியாளர்களுக்கு முதன்முறையாக, அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் திட்டம் துவங்கப்பட்டது. மேலும், பாதாள சாக்கடை அடைப்பை நீக்கக்கூடிய பணியில் ஈடுபட்டு, பணியின்போது இறக்க நேரிட்டால், அவர்கள் வாரிசுகளுக்கு கருணைத் தொகையாக 30 இலட்சம் ரூபாய் வழங்கக்கூடிய திட்டம் உருவாக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இப்போது நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டு, அந்தத் திட்டத்தை கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் 12ஆம் தேதி, மதுரையில் நான் தொடங்கி வைத்தேன்.

இந்தத் திட்டத்தில், நான் முதல்வன் திறன் பயிற்சி, பாதுகாப்பு உபகரணம் வழங்குதல், ஹெல்த் இன்சூரன்ஸ், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில், தொடர் உடல்நலப் பரிசோதனைகள் மற்றும் மாற்று வாழ்வாதார நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தடையின்றி பெற ஏற்பாடு செய்திருக்கிறோம்.

இதற்காக, 50 கோடி ரூபாய் அறக்கட்டளை நிதி உருவாக்கப்பட்டு, தூய்மைப் பணியாளர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கை மேம்படுத்தப்பட நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் சார்பில், பாதாள சாக்கடைத் திட்டத்தின் மூலம் நடைபெறும் அனைத்துப் பணிகளும், முழுமையாக இயந்திரமயம் ஆக்கப்பட்டிருக்கிறது.

**உங்கள் கோரிக்கைகளை திராவிட மாடல் அரசு படிப்படியாக நிறைவேற்றும்!**

இன்னும் நிறைய நலத்திட்டங்கள் செயல்பாட்டில் இருக்கிறது. இவ்வளவு செய்திருந்தாலும், உங்களுக்கான தேவைகள் இன்னும் நிறைய இருக்கிறது என்று எனக்கு நன்றாகத் தெரியும்!

நான் நிச்சயமாகச் சொல்கிறேன்... அதையெல்லாம் நம்முடைய திராவிட மாடல் அரசு படிப்படியாகச் செய்யும் என்பதை நம்பிக்கையோடு தெரிவித்துக் கொள்கிறேன்!

**இரவு பகல் பார்க்காமல் நீங்கள் உழைக்கிறீர்கள்... ஆனால், உங்களுக்கென்று தனியாக ஓய்வறை இல்லை என்று பலரும் கவலைப்படுவதாக என்னிடம் சொன்னார்கள்... பலபேர் என்னிடத்தில் சொன்னார்கள். அதனால், இந்த நிகழ்ச்சி மூலமாக ஒரு அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்...**

**சென்னையில் 200 வார்டுகளிலும் அனைத்து வசதிகளுடன் ஓய்வறை!**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் 200 வார்டுகளிலும், தூய்மைப் பணியாளர்களுக்காக பிரத்யேகமாக, 300 சதுர அடி அளவில் உடை மாற்றும் அறை, கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன் ஓய்வறைகள் கட்டப்பட்டு, பயன்பாட்டிற்கு அவைகள் கொண்டு வரப்படும்!**

**அதுமட்டுமல்ல, இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கின்ற இந்த முதலமைச்சரின் உணவுத்திட்டம் வருகின்ற டிசம்பர் 6ஆம் தேதி முதல் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்!**

நான் ஏற்கனவே சொன்னது போல, உங்களுடைய மற்ற கோரிக்கைகள் படிப்படியாக நிச்சயம் நிறைவேற்றித் தரப்படும்!

**சென்னை ‘கிளீன் சிட்டி’ எனப் பெயர் பெற துணை நிற்பீர்!**

என்னைப் பொறுத்தவரைக்கும், வெளி மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வருபவர்கள் சென்னை தான் இந்தியாவிலேயே “கிளீன் சிட்டி”, தமிழ்நாடுதான் “கிளீன் ஸ்டேட்” என்று சொல்ல வேண்டும்! அதற்கு நீங்கள் எல்லோரும் துணை நிற்க வேண்டும்! இந்த நிலையை நாம் உடனே அடைந்துவிட முடியாது. நன்றாகத் தெரியும். ஏனென்றால், இதற்கு பல நடைமுறைச் சிக்கல்களும், தடைகள் எல்லாம் இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை! இருந்தாலும், நான் உங்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, இப்போது கூட சமீபத்தில், ஜெர்மனி நாட்டிற்குச் சென்று வந்தேன். அதற்குப் பிறகு வெளியிட்ட ‘உங்களில் ஒருவன் பதில்கள்’ வீடியோ பதிவில் நான் சொல்லியிருந்தேன். பொது இடங்களில் தூய்மையைப் பேணக் கூடிய “Self discipline” நம்முடைய மக்களுக்கு வரவேண்டும் என்று சொன்னேன்.

பொதுமக்கள் சிறிது யோசித்துப் பார்க்க வேண்டும். நாம் நடந்து செல்கின்ற பாதை, சிறிது தூய்மையற்று இருந்தாலே, முகச் சுளிப்போடு கடந்து போவோம். ஆனால், தூய்மைப் பணியாளர்களோ, நாம் அன்றாடம் தேவையில்லை என்று தூக்கி எறிகின்ற கழிவுகளை அப்புறப்படுத்துகிறார்கள். இவர்களை கொஞ்சம் நினைத்துப் பார்த்து, அதையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்காமல், பொது இடங்களில் கழிவுகளைக் கொட்டுவது போன்ற செயல்களை எல்லாம் செய்வது நியாயமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சிலரெல்லாம் வீட்டில் இருந்து, குப்பைத் தொட்டி வரைக்கும், எடுத்துக் கொண்டு வந்த குப்பையை, குப்பைத் தொட்டியில் போடாமல், அங்கிருந்து தூக்கி எறிவது, அப்படியே அருகாமையில் போடுவது, தூரத்தில் இருந்து தூக்கி வீசுவார்கள்... இந்தப் பழக்கத்தை எல்லாம் எளிதில் மாற்றிக் கொள்ளலாம்!

எதிர்காலத்தில், மேற்கத்திய நாடுகள் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் இருப்பதுபோல, மக்கள் அனைவரும் சுய ஒழுக்கத்தை நூறு விழுக்காடு கடைப்பிடிப்பவர்களாக முன்னேறி, குப்பைகளை ஒழுங்காகத் தரம் பிரித்துப் போட்டு, தூய்மைப் பணியாளர்களின் சுமையினை பெருமளவில் குறைக்க வேண்டும்.

**சமூகத்தில் ஒழுக்கம் மேம்பட வேண்டும்!**

தூய்மைப் பணியாளர்கள் என்பவர்கள் மற்ற எந்தப் பணியையும் போன்ற பணியாக கருதப்படுகின்ற அளவுக்கு இவர்களுடைய கண்ணியமும், முறையான பணிச்சூழலும் உறுதி செய்யப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்! அதற்கான முன்னெடுப்புகளை, திட்டங்களாக உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும் என்று நான் நினைக்கிறேன்... இதையெல்லாம் இவர்களுக்காக என்று சொல்லவில்லை...

பொதுவாகவே, ஒரு சமூகமாக நம்முடைய ஒழுக்கம் மேம்பட வேண்டும் என்ற அக்கறையுடன் சொல்கிறேன்! நம்மைப் பார்த்துத்தான் நம்முடைய பிள்ளைகள் நடந்து கொள்வார்கள்! நாம் Correctஆக நடந்து கொண்டால், அடுத்து வரக்கூடிய தலைமுறை இன்னும் Betterஆக நடந்து கொள்வார்கள். அப்படிப்பட்ட ஒரு சமூகமாக நாம் நகரவேண்டும் என்று நான் விரும்புகிறேன்!

**வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்! உடல் நலம் பாதுகாக்கப்பட வேண்டும்!**

என்னுடைய கனவு உங்களுடைய வாழ்க்கைத் தரம் முன்னேற வேண்டும்! உங்களுடைய உடல்நலம் பாதுகாக்கப்பட வேண்டும்! உங்களுடைய பிள்ளைகள் நன்றாகப் படித்து, உயர்ந்த பொறுப்புகளில் உட்கார வேண்டும்!

கடந்த ஆண்டு, ஒரு செய்தி வந்தது... ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன்... திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த துர்கா என்ற ஒரு பெண் தூய்மைப் பணியாளரின் மகள் அவர் படித்து, குரூப்2 தேர்வில் வெற்றி பெற்று, நகராட்சி ஆணையராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்! இதுதான், நான் விரும்பக்கூடிய முன்னேற்றம்!

**தூய்மைப் பணியாளர்களின் பிள்ளைகள் பெரிய அதிகாரிகளாக வர வேண்டும்!**

எதிர்காலத்தில், உங்கள் பிள்ளைகளும் படித்து முன்னேறி, பெரிய அதிகாரிகளாக பொறுப்பிற்கு வரவேண்டும்! அவர்களுக்கு நான் பணி நியமன ஆணைகள் தரவேண்டும்! இதற்காகத்தான் தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களை எல்லாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்!

சுய ஒழுக்கம் இல்லாமல், முழுமையான வளர்ச்சியோ, சமூக மேன்மையோ அடைவதற்கு சாத்தியமே கிடையாது! அரசு தன்னுடைய கடமையைச் செய்யும்! மக்களும் பொறுப்பாக இருந்து, பொது இடங்களிலும், நம்முடைய மனங்களையும் தூய்மையாக வைத்திருப்போம்! அதற்காகத் தொடர்ந்து உழைப்போம்! தன்னலம் கருதாத தூய்மைப் பணியாளர்களின் சேவையைப் போற்றுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**இந்த மாநகரத்தை தூய்மையாகப் பாதுகாக்கின்ற உங்களைப் பாதுகாக்க வேண்டியது எங்களுடைய கடமை! உங்களுடைய மாண்பு காக்கப்பட வேண்டும்! உங்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்! உங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்! இதுதான், சமூகநீதி!**

**இந்தச் சமூகநீதிப் பயணத்தில் உங்கள் சுயமரியாதையைக் காத்து உங்கள் பசியைப் போக்கிடத்தான், இன்றைக்கு இந்த முதலமைச்சரின் உணவுத்திட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம்!**

**இந்தத் திட்டத்தின்படி, தூய்மைப் பணியாளர்களுக்கு அவர்களுடைய பணிகளுக்கு இடையில், உணவு வேளையில் சுவையும் ஆரோக்கியமும் நிறைந்த உணவு வழங்கப்படும்.**

---

# காரைக்குடியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை!...

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

அந்த விழாவிலும் என்னைக் கலந்துகொள்ள வைத்தார். கருஞ்சட்டை பதிப்பகம் மூலமாக ஏராளமான திராவிட இயக்க நூல்களை கொண்டு வந்துகொண்டு இருக்கிறார்.

இப்படி, இளைஞர் அணி பணிகளில் சுப.வீ அண்ணனும், அண்ணன் சுப.வீ அவர்களின் முன்னெடுப்புகளில் நாங்களும் இருப்பது எங்களுக்கு பெருமை. இன்னும் சொல்லப்போனால், நாங்க செய்கிற விஷயங்களை, அண்ணன் சுப.வீ பார்த்து பாராட்டிவிட்டார் என்றால், நன்றாக இருக்கிறது என்று சொல்லிவிட்டார் என்றால், நாங்கள் சரியான திசையில் செல்கிறோம் என்ற தைரியும் வந்துவிடும். இன்றைக்கு கலைஞர் அவர்கள் இல்லை. ஆனால், கலைஞர் அவர்கள் இருந்தால், எப்படி என்னை வழிநடத்துவாரோ, நம் பணிகளைப் பார்த்து எப்படி மகிழ்வாரோ, அதே மாதிரி கலைஞர் இடத்தில் இருந்து அண்ணன் சுப.வீ அவர்கள் எங்களை வழிநடத்திகொண்டு இருக்கிறார். எங்கள் பணிகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்.

நானும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களும் பிறந்ததில் இருந்தே மிக நெருங்கிய நண்பர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எனக்கு தெரிந்த விஷயம் அவருக்குத் தெரியும், அவருக்குத் தெரிந்த விஷயம் எனக்குத் தெரியும். எங்களுக்குத் தெரிந்த விஷயம் யாருக்கும் தெரியாது. அதில் ஒன்றைத்தான் இப்போது உங்களுக்கு சொல்லப்போகிறேன். ஒவ்வொருவருக்கும் ஒரு செல்ல பெயர் வைத்திருப்போம். சில செல்ல பெயர்களை வெளியே சொல்ல முடியும், சில செல்ல பெயர்களை வெளியே சொல்ல முடியாது. அதே போல் அண்ணன் சுப.வீ அவர்களுக்கு நாங்கள் வைத்துள்ள செல்லப் பெயர் டிரவிடியன் என்சைக்ளோபீடியா. அப்படிப்பட்ட தலைமைத் தொண்டன்தான் அண்ணன் சுப.வீ அவர்கள்.

எங்களுக்கு கருத்துகளில், வரலாற்றில் ஏதாவது சந்தேகம் வந்துவிட்டது என்றால் `நெஞ்சுக்கு நீதி’ நூலை எடுத்துப் படி என்பார்கள். நாங்கள் முதலில் கேட்பது அண்ணன் சுப.வீ அவர்களின் உரையைத்தான். அவருடைய கரம்பற்றி, கழக இளைஞர் அணியும் சரி, நானும் சரி என்றென்றும் நடை போடுவோம் என்பதை இந்த நேரத்தில் உறுதியாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**தியாகத்தால் உருவான இயக்கம்!**

திராவிட இயக்கத்தை வளர்ப்பதற்காக நாம் இந்த அளவுக்கு உழைத்துக்கொண்டு, பாடுபட்டுக்கொண்டு இருக்கிறோம். ஆனால், திராவிடம் என்றால் என்ன என்றே தெரியாத எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பா.சி.ச பா.ஜ.கவுடன் சேர்ந்துகொண்டு திராவிட இயக்கத்தை அழிக்கிற வேலையில் ஈடுபட்டுள்ளார்.

தி.மு.க என்பது போராட்டத்தாலும், தியாகத்தாலும் உருவான இயக்கம். தமிழ்நாட்டில்தான், திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சி, ஆனால், டெல்லியில் திராவிட முன்னேற்றக் கழகம் தான் முக்கிய எதிர்க் கட்சி.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் எதிர்க்கட்சி, டெல்லியைப் பொறுத்தவரைக்கும் அது அடிமைக் கட்சி. நாம் இப்படி கொள்கையோடு செயல்படுகிறோம், ஆனால், ஒரு கொள்கையற்ற கூட்டம் எல்லாம் வன்மத்தை, அவதூறுகளை பரப்பும் கூட்டமாக இன்று ஒரு கூட்டம் உருவெடுத்துள்ளது.

திராவிட இயக்கத்தின் கொள்கைகள், தி.மு.க.வின் குரல் நாடு முழுவதும் பரவுவதைப் பார்த்துவிட்டு, பாசிச பா.ஜ.கவும், அடிமைக் கூட்டமும் மிரண்டுள்ளார்கள். சுடுதண்ணீர் வைக்கும்போது பாத்திரத்தில் தண்ணீர் வைத்து, ஒரு தட்டு போட்டு மூடி கீழே நெருப்பு வைப்பார்கள். கீழே இருக்கிற நெருப்பினால், சூடேறி பாத்திரத்தில் இருக்கும் தண்ணீர் கொதிக்க ஆரம்பிக்கும். அப்போது, பாத்திரத்தை மூடி இருக்கிற தட்டு ஆட ஆரம்பித்து விடும்.

அதுமாதிரி, இந்தியாவின் தென்கோடியில் இருக்கும் தமிழ்நாட்டில் இருந்து நாம் பற்ற வைக்கிற திராவிடச் சூடு ஒட்டுமொத்த நாட்டுக்கும் பரவுகிறது. டெல்லியை ஆட வைத்துள்ளது. அதனால்தான் தி.மு.கவை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்று ஒன்றிய பா.ஜ.க அரசு சூழ்ச்சி செய்கிறது.

அந்த சூழ்ச்சியின் ஒரு பகுதி தான், இப்போது நடக்கிற எஸ்.ஐ.ஆர். திட்டம். தி.மு.கவுக்கு ஆதரவாக இருக்கிற வாக்குகளை எப்படியாவது நீக்க வேண்டும். குறிப்பாக, சிறுபான்மை மக்கள், பெண்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்குகளை நீக்க வேண்டும். இதுதான் அவர்கள் நோக்கம். இந்த சூழ்ச்சியை முறியடிக்கிற வகையில், நீங்கள் எல்லாம் உங்களுடைய வாக்குச்சாவடியில் உங்களின் வாக்குகளை முதலில் சரிசெய்ய வேண்டும். மிகுந்த கவனத்துடன் நாம் பணியாற்றி முறியடிக்க வேண்டும்.

2026இல் நம் கழக கூட்டணி மீண்டும் வெற்றி பெற வேண்டும். நிச்சயம் வெற்றி பெறும். நம் கழகம் ஏழாவது முறையாக நிச்சயம் ஆட்சி அமைக்கும். நம் தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்க வேண்டும். அதற்காக, அடுத்த 4 மாதங்களும் நாம் அனைவரும் தொடர்ந்து பணியாற்றிட வேண்டும். இன்றைக்கு பலபேர் புதிதாக கட்சி தொடங்குகிறார்கள், தொடங்கட்டும் வேண்டாம் என்று சொல்லவில்லை. கட்சியின் புது தலைவர்களுக்கே அங்கு வரலாறு கிடையாது. ஆனால், ஒரு இயக்கத்தின் தொண்டனுக்கு எவ்வளவு பெரிய வரலாறு உண்டு என்று இன்று நாம் நிரூபித்து காட்டியுள்ளோம். அய்யா ராம.சுப்பையா அவர்களின் பிறந்த நாளில் நாம் அனைவரும் ஒரு உறுதிமொழி ஏற்போம்.

வருகிற சட்டமன்றத் தேர்தலில் நம் தலைவர் தலைமையிலான அணிக்கு மிகப்பெரிய வெற்றியை நாம் தேடி தருவோம், அய்யா இரா.சுப்பையா பிறந்த நாளில் அந்த சபதத்தை ஏற்போம் என்று சொல்லி, இந்த சிறப்பான வாய்ப்பை அளித்த அண்ணன் சுப.வீ அவர்களுக்கும், வந்திருக்கின்ற அமைச்சர் பெருமக்களுக்கும், வந்திருக்கின்ற முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்புகள் உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், கழக இலக்கிய அணி புரவலர், முன்னாள் அமைச்சர் தென்னவன், சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, மாங்குடி, திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், வசந்தா, திராவிடர் கழக பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, மாநகராட்சி மேயர் முத்துத்துரை, துணை மேயர் குணசேகரன், திரைப்பட இயக்குனர் எஸ்.பி.முத்துராமன், கனகம், சுவாமிநாதன், சரோஜினி செல்வமணி, வெங்கடாசலம், திராவிட இயக்க தமிழர் பேரவை நிர்வாகிகள் சிற்பி செல்வராஜ், செல்வின் சௌந்தர்ராஜா, உமாபதி, சிங்கராயர், பெல் ராஜன், எட்வின், உமா, வைரமுத்து, கவிச்சுடர் கவிதைப்பித்தன், கணேசன், சேங்கை மாறன், அப்துல்லா, ஜி.பி.ராஜா, பூர்ண சங்கீதா, மருது அழகுராஜ், ஜோன்ஸ் ரூஸ், நாகனி செந்தில், வல்லபாய், அழகப்பா பல்கலை கழகத்தின் துணை வேந்தர் முனைவர் ரவி, படிகாஸ், திராவிடமணி, சின்ன கருப்பையா, மும்பை குமணராசன், பழ.ராமச்சந்திரன், சிதம்பரம், குமரன்தாஸ், கலைமணி, செல்வம் முடியரசன், நகுல் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.